சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை,
மாவட்ட சமூகநல அலுவலகம், தென்காசி
சகி - ஒருங்கிணைந்த சேவை மையம்

## பத்திரிகை செய்தி

**தென்காசி மாவட்டம் சகி - ஒருங்கிணைந்த சேவை மையம், வழக்கு பணியாளர் பணியிடம் தற்காலிக தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம்:**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, தென்காசி மாவட்ட சமூகநல அலுவலகத்தின் கீழ் செயல்பட்டு வரும் சகி -ஒருங்கிணைந்த சேவை மையத்திற்கு வழக்கு பணியாளர் பணியிடம் தற்காலிக தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்யப்படவுள்ளது. சுழற்சி முறையில் பணிபுரிய வழக்கு பணியாளர் பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தென்காசி மாவட்டத்தை சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவத்தை www.tenkasi.nic.in என்ற இணைத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலகம், 140/5B,ஸ்ரீசக்திநகர், தென்காசி - 627 811 என்ற முகவரிக்கு அன்று 15.12.2025 மாலை 5.30 மணிக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலக முவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், கல்வி சான்றிதழ் நகல்கள், அனைத்து சான்றிதழ்களின் (வயது சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உட்பட) நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் காலதாமதமாக வரப்பெறும் விண்ணப்பங்கள் தகவலின்றி நிராகரிக்கப்படும்.

| வ எண் | பதவியின் பெயர் | பாலினம் | காலிப் பணியிடம் | கல்வித்தகுதி | பணி சார்ந்த முன் அனுபவம் | ஊதியத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | வழக்கு பணியாளர் | பெண் | 1 | சமூகப்பணி அல்லது உளவியல் இளங்கலை பட்டம் | 1 வருடம் | ரூ.18,000/- |

மா. ஆ. த
28/11/25